ISSN 2278 - 1641
UGC Care Listed Journal

# புதுப்புனல்

கலை இலக்கிய மாத இதழ்

மலர் : 14 இதழ் : 3 ரூ. 75/– மார்ச் 2023




Scanned with CamScanner

## சிறுகதை

[illegible]

## ஆய்வுக் கட்டுரை


[illegible] கோ.தமிழ்ச்செல்வி 6

[illegible] : [illegible]நூல்களின் சாரம் ந.கலைமகள் 9

[illegible] : ஔவையாரின் சமூக நோக்கு கு.வித்யாசங்கரி 12

[illegible] நாவலில் பழங்குடியினரின் [illegible] மு.இந்திரா 15

[illegible] இருளர்களின் நாட்டுப்புற மருத்துவமுறைகள் ஆ.மேரி 19

மலைப்பாம்பு மனிதர்கள்' நாவலில் ஒரத்தநாடு வட்டார சாகுபடி முறைகள் பி.சா.மாதவி 22

வள்ளலாரின் ஆன்மநேய ஒருமைப்பாடு சீ.வைஜெயந்திமாலா 25

கம்பராமாயணம் : சிறுபாத்திரங்களின் இயல்பும் இன்றியமையாமையும் சி.நாகவேணி 28

தேனி சீருடையான் படைப்புகளில் தீண்டாமைக் கொடுமைகள் இரா. நிவேதா 31

அகநானூறு : தாய்க் கூற்றுப் பாடல்களில் மூவேந்தர்கள் ப.கோகிலா 34

பெரியபுராணம் : சிவத்தொண்டர் வாழ்க்கையில் பத்தினியர்தம் பங்கு வா.ராஜசிக்குமார் 37

ஞானதிரவியம் படைப்புகளில் விளிம்புநிலை மாந்தர்கள் க.முருகானந்தம் 41

ஹரணியின் மறுபடியும் நதி வரும் கதைகளில் வாழ்வியல் சிந்தனைகள் செ.மோகனசுந்தரி 44

'சாம்பவான் ஓடைச் சிவராமனி'ல் பண்ணைத் தொழிலாளர் நிலை பி.சா.மாதவி, 48

சிற்றிலக்கியம் : கோடீச்சரக் கோவை ஒரு கண்ணோட்டம் நா. மலர்விழி 51

பரத்தையர் ஒழுக்கம் ஜெ. அம்பேத்கர் 56

இலக்கியங்களில் பெண்களை முன்வைத்து "விருந்தும் விருந்தோம்பல் கோட்பாடும்" செ. ஓவியம் 59

ஹைக்கூ கவிதைகளில் மகளிர் நிலை கோ.நிர்மலா தேவி 64

ஊடக உரையாடலுக்கு நம்மாழ்வார் காட்டும் நெறிகள் சு.நாகரத்தினம் 66

எட்டுத்தொகையில் இறைச்சி செ.ச.ஜீவிதா சாந்தகுமாரி 71

ஹென்றி ஆர். ஹாய்சிங்கடனின் பழந்தமிழ் ஆய்வு ஜெ. கார்த்திக் 74

[illegible] சுயசரிதையில் திருநங்கைகள் பற்றிய [illegible] இரா. கார்த்திகா

புதின இலக்கியத்தில் இனவரைவியல் கூறும் பண்பாட்டுப் பதிவுகளும் த. கீதாஞ்சலி

சங்க இலக்கித்தில் மன்னர்களின் மாண்புகள் ப.லெட்சுமி

முல்லைப்பாட்டில் நிலவியலும் வாழ்வியலும் கி.கோதண்டராமன்

முருக வாழ்பாட்டில் நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளும் இசைக் கூறுகளும் சீ. முத்துலட்சுமி

போரில் அறம் கி.வான்மதி

சிலப்பதிகாரத்தில் தொல்குடிகளும் வழிபாட்டு மரபுகளு[illegible] ஓர் ஆய்வு து.பிரகாஷ்

நற்றிணை குறிஞ்சித்திணைப் பாடல்களில் வரலாற்று[illegible] பதிவுகள் பி.ராமர்

பா. செயப்பிரகாசம் படைப்புகளில் சமூகப் பின்புலம் செ.இரா.இரமேசு

சேலம் மாவட்ட நாட்டார் மக்களின் வழிபடு பொருட்க[illegible] அறிவியல் சிந்தனைகளும் ச.ரம்யா

திருக்குறளும் நகை மெய்ப்பாடும் சீ.லலிதா

யாப்பிலக்கணக்கூறுகளின் மரபு மாற்றமும் இரா. சண்முகப்பிரியா

"கவிஞர் வைரமுத்து திரையிசைப் பாடல்களில் பெண்ணியம்" அ. செந்தில்ராஜா

தூப்புக்காரி நாவலும் கதைமாந்தர்களும் வினோ ராஜ்.லா[illegible]

கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் தமிழகத்தில் ஏற்படுத்திய விளைவுகள் ஜா. பிராங்கிளின் தேவராஜ்

வள்ளலார் காட்டும் உளவியல் ஆளுமை சை.சுஜிஷ்

திருவாசகத்தில் விளையாட்டுக் கருத்தாடல்கள் மு. தியாகராஜன்

நாயன்மார்களின் மனித நேய சிந்தனைகள் ப.பிரபு

தொல்காப்பியப் பொருட்பகுப்புக் கோட்பாடு ரா. சிலம்பரசன்

ஜெயமோகனின் கிளிக்காலம், அம்மன் மரம் குறுநாவல்க[illegible] குடும்ப அமைப்பு உறவு முறைகளும் அ. நர்மதா

சங்க இலக்கியங்களில் தொழில்களும் உறவுகளும் மு.ஜோதி

நற்றிணைப் பாடல்களில் ஊர்வன வகைகள் மெ. ரேவதி


Scanned with CamScanner

ஆய்வுக்கட்டுரை

# புதின இலக்கியத்தில் இனவரைவியல் கூறும் பண்பாட்டுப் பதிவுகளும்

ஆய்வாளர்
**த. கீதாஞ்சலி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

## அறிமுகம்

ஆரம்பக்காலக் கட்டத்தில் செய்யுள் நடையில் இருந்த இலக்கியங்கள் புதுவடிவம் பெற்று உரைநடை வடிவெடுத்தன. உரைநடையின் பரிணாம வளர்ச்சியாகப் புனைகதைகள் உருவாயின. உரைநடைக் காலம் தொட்டு இன்று வரை சமூகம், வரலாறு, அறிவியல், உளவியல், துப்பறியும் தொடர், மொழிப்பெயாப்பு, தகவல், பெண்ணியம், மார்க்சியம், தலித்தியம் சார்ந்தவை எனப்பலவகையான கருப்பொருள்களைக் கொண்டு புதினங்கள் படைக்கப்பட்டுள்ளனன. கற்பனையாகப் புனையப்படுவது புனைகதை. அவ்வகையில், தொடக்கக்காலத்தில் எழுந்த புதினங்கள் மேல்தட்டு மக்களை மையப்படுத்தியே எழுதப்பட்டன. அதன் தொடர்ச்சியாக இடைக்காலம் முதல் இன்று வரை எழுதப்படும் புதினங்கள் குறிப்பிட்ட வட்டார மக்களின் வாழ்வியல் அல்லது பல்வேறுபட்ட இனத்தைச் சார்ந்த மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டுபடைக்கப்பட்டு வருகின்றன. அவைபடிக்கும் வாசகனின் மனத்தை ஈப்பதுடன் பல்வேறு பட்ட சமூகத்தின் பழக்க வழக்கங்களையும் கலாச்சாரத்தையும் அறியவழிவகை செய்கிறது. ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட புதினத்தில் படகர் இனமக்களின் வாழ்வியல் பதிவுகளையும் கதை நிகழ்ந்த காலக்கட்டத்தில் அம்மக்களின் பண்பாடு எவ்வாறு இருந்தது என்பதையும் தற்காலத்தில் அவை எவ்வாறு மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கின்றன என்பதையும் உற்றுநோக்குவதாக இவ்வாய்வு அமைகின்றது.

## ஆய்வுநோக்கம்

இனத்தின் வாழ்வியல் குறித்த கருத்தாக்கங்களைப் புதினத்தில் பதிவு செய்யும் போது, அதில் அவ்வினமக்களின் வரலாறு, வாழ்க்கைமுறை, சடங்குமுறைகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், தொழில் முறைகள் போன்ற இனவரைவியல் கூறுகள் இடம்பெற்றுள்ளனவா் என்பதைக் கண்டறிவதுடன், குறிப்பிட்ட இனத்தின் பாரம்பரியமான பண்பாடுகள் தற்காலத்தில் மாற்றம் அடைந்துள்ளனவர் என்பதை ஆராய்வதாகவும் இக்கட்டுரையின் நோக்கம் அமைகிறது.

## ஆய்வுஅணுகுமுறைகள்

புதினத்தில் காணப்படும் படகர் இனமக்கள் பற்றிய இனவரைவியல் கூறுகளைவகைப் படுத்தித்தரவுகளின் அடிப்படையில் தொகுத்தும் பகுத்தும் ஆய்வு மேற்கொள்ளப்படுவதால் பகுப்பாய்வு அணுகுமுறையும் அவ்வினமக்களின் புவிச்சூழல், நம்பிக்கைகள், சடங்குகள், நம்பிக்கைகள் பற்றி விளக்குமிடங்களில் விளக்கமுறை அணுகுமுறையும் சமூக நிலை குறித்து ஆய்வதால் சமூகவியல் அணுகுமுறையும் அவர்களின் வாழ்விடம், சுற்றுச்சூழல் போன்றவற்றை விளக்கிக்காட்டுமிடத்து வரலாற்றுமுறையும் இனவரைவியல் அணுகுமுறையும் பின்பற்றப்பட்டுள்ளன.

## ஆய்வுமுன்னோடிகள்

இனவரைவியல் குறித்த தினாய்வுகள் தொடக்ககாலத்திலிருந்தே நடைபெற்று வருகின்றன. ஆனால், புதினங்களில் இனவரைவியல் கூறுகளைப் பொருத்தி ஆய்வு மேற்கொள்ளுதல் என்பது அருகியே காணப்படுகிறது. எட்காதாஸ்டன் (கந்தையாபிள்ளை. ந.சி, மொழிபெயர்ப்பு ஆசிரியர்), தென்னிந்திய குலங்களும் குடிகளும் (1999) எனும் புத்தகத்தில் பல்வேறு இனக்குடிகளைச் சார்ந்த மக்களின் வாழ்வினை ஆராய்ந்து ஆய்வு முடிவுகளை வெளியிட்டுள்ளார். அதேபோல ஆ. சிவசுப்பிரமணியன் அவர்கள் இனவரைவியலும் தமிழ்நாவலும், எனும் புத்தகத்தில் இனவரைவியல் குறித்த செய்திகளைப் புதினங்களில் பொருத்தி ஆய்வு மேற்கொண்டு புத்தகமாக வெளியிட்டுள்ளார். (சிவசுப்பிரமணியன், 2009) இந்த இரண்டு புத்தகங்களை முன் மாதிரியாகக் கொண்டு குறிஞ்சித்தேன் புதினத்தில் காணப்படும் இனவரைவியல் கூறுகளைப் பொருத்திப்பார்த்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## இனவரைவியல்

இனவரைவியல் என்பதற்கு, மனிதர்களின் வெவ்வேறு இனங்கள், பண்பாடுகள் பற்றி விவரிக்கும் துறை: ***ethnography*** (ப.170) என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியும், ***'Ethnography'*** எனும் சொல்லுக்கு மனித வினப்பரப்பு விளக்கவியல் (ப.125) என்று மானிடவியல் கலைச் சொல்லகராதியும் விளக்கம்தருகின்றன.

மேலை நாட்டறிஞரான புருன்வாண்ட் "குறிப்பிட்ட ஒரு மானிட குழுவில் அல்லது வட்டாரத்தில் காணப்படும் அனைத்து வகையான மரபுகள் பற்றி மேற்கொள்ளப்படும் விளக்கமுறை ஆய்வே இனவரைவியல் ஆகும்" (Brunvand & Harold, study of American Folklore, p.125) என்று இனவரைவியலுக்கான வரையறையைத் தருகிறார்.

இனவரைவியல் என்பதற்கு, "எழுத்தாளன் யாரைப் பற்றி எழுதுகிறானோ, அந்த மக்களின் வாழ்க்கைமுறையைப் பற்றிய விளக்க உரைகள், விவர அறிக்கைகளை விளக்கக்கூடிய விசாரணை மற்றும் எழுத்து வடிவமே இனவரைவியல்ஆகும்" (Denzin&

Norman, Interpretive Ethnograpic practice for the 21· Century, p.27) எனமேலைநாட்டறிஞா விளக்கம் தருகிறார்.

கலைக் களஞ்சியமான விக்கிப்பீடியாவும், இனவரைவியல் என்பது களஆய்வுகளின் அடிப்படையில் மனித சமூகத் தோற்றப்பாடுகள் தொடர்பான பண்பு நிலை விளக்கமாக அமையும் ஒருவகை எழுத்தாக்கம் ஆகும். தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப்பற்றி எழுதுவது இனவரைவியல் எனலாம்.ஒரு முறைமையின் பகுதிகளைத் தனித்தனியாக அணுகுவதன் மூலம் அம்முறைமையை அச்சொட்டாகப் புரிந்து கொள்ள முடியாது என்ற எண்ணக் கருத்தில் அடிப்படையில் உருவான ஒரு முழுதளாவிய ஆய்வு முறையின் விளைவுகளை இனவரைவியல் முன்வைக்கிறது. இனக்குழு பற்றிய முழுமையான ஆய்வு என்பதனால் இதனை இனக்குழுவியல் என்றும் குறிப்பிடலாம் *(www.ta.wikipedia.org)* எனஎடுத்துக்காட்டியுள்ளது.

## இனவரைவியல்கூறுகள்

இனவரைவியல் என்பது தனிப்பட்ட மக்கள் கூட்டத் திடமிருந்து பெறப்படும் பண்பாட்டுத் தரவுகள்தான் இனவரைவியல் கூறுகள் என்பதற்கேற்ப, என்னென்ன கூறுகள் சேகரிக்கப்பட வேண்டும் என்பதை, ஓ அயற்பண்பாட்டை விளக்க முற்படும் எந்த ஒரு சிறந்த இனவரைவியல் தொகுப்பும் பின்வரும் முதன்மையான கூறுகளைப் பற்றி விளக்குவதாக அமையும்.

அவை புவிச்சூழலியல் *(topography)* சுற்றுச்சூழல் *(environment)* காலநிலை *(Climate)* குடியிருப்புமுறை *(settlement pattern)*

பொருள்சார்பண்பாடு *(material culture)* குடும்பஅமைப்பு, திருமணமுறை, உறைவிடமுறை *(residence pattern)* வாழ்வியல் சடங்குகள், குழந்தை வளர்ப்புமுறை, பண்பாட்டு வயமாக்க முறை *(enculturation)* மக்களின் உளவியல் பாங்குகள், மணக்கொடை, மணவிலக்குமுறை, வாழ்க்கைப் பொருளாதாரம் *(subsistence)* தொழிற்பகுப்பு *(division of Labour)*, உற்பத்திமுறை, நுகர்வுமுறை, பங்கீட்டுமுறை, பரிமாற்றமுறை, கைவினைத் தொழில்கள், அரசியல்முறை, அதிகார உறவுகள், சமூகக்கட்டுப்பாடு, மரபுசார் சட்டங்கள் *(cutomary laws)*, சமய நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டு முறைகள், மந்திரம், சூனியம், விழாக்கள், இசை, விளையாட்டுகள், அழகியல் சிந்தனைகள், வழக்காறுகள் *(Folklore)*, ஈமச்சடங்குகள், பிற தொடர்புடைய செய்திகள் முதலியன. அவ்வாறு தொகுக்கப்படும் செய்திகள் ஒரு தனிப்பட்ட சமூகத்தைப் பற்றியதாக இருப்பதால் இன வரைவியல் நூல்கள் அனைத்தும் தனிவரைவு நூல்கள் *(monographs)* எனக்கூறப்பெறும் (பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், பக்.118,119) என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்து குறிப்பிட்ட இனத்தின் பண்பாட்டுக் கலாச்சாரத்தை முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் குறைந்தபட்சம் மேற்கான் கூறுகளாவது கட்டாயமாகத் திரட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகின்றது.

## புதினங்களில் இனவரைவியல் கூறுகள்

புதின இலக்கியங்கள் பொதுவாகச் சமுதாயத்தில் நிலவும் சீகேடுகளை எடுத்துக்காட்டுவனவாக அமைகின்றன என்றாலும், சில புதினங்கள் குறிப்பிட்ட இனத்தைப் பற்றிய செய்திகளுடன், அந்த இனத்தவரின் பண்பாட்டை விளக்கும் வரலாற்றுக் கருவூலமாகவும் திகழ்கின்றன.

அவ்வகையில் இனவரைவியல் செய்திகள் எவ்வாறு புதின இலக்கியத்தில் பயன்படுத்தப்படுகின்றன என்பதை, ஒரு இலக்கியப் படைப்பு சிறந்து விளங்க வேண்டுமானால் அதில் இடம்பெறும் மாந்தர்களும், அம்மாந்தர்களின் பின்புலத்திலுள்ள சகல இயக்கங்களும் உரிய பொருட்களும் மிக நுணுக்கமாகச் சித்திரிக்கப்பட வேண்டும். இதற்கு மிகவும் உறுதுணையாக அமைவது அவ்விலக்கியத்தைப் படைக்கும் படைப்பாளியின் இனவரைவியல் அறிவாகும். இலக்கியத்தில் இடம்பெறும் ஒரு குறிப்பிட்ட் சமூகத்தைப்பற்றிய இனவரைவியல் செய்திகள் அவ்விலக்கியத்தில் இடம்பெறும் பாத்திரங்களுக்கும், பிரச்சனைகளுக்கும் பொருத்தமான பின் புலத்தை உருவாக்க உதவுகின்றன (ஆ.சிவசுப்ரமணியன், இனவரைவியலும் தமிழ் நாவலும்,ப.12) என்ற சான்றின் வழி ஓ இனத்தின் பண்பாட்டை அறிந்துகொள்ள உதவும் இனவரைவியல் செய்திகள் பெரும்பாலும் புதினத்தின் பின்னணியாகவோ பாத்திரங்களின் மூலமாகவோ வெளிப்படும் என்பது புலனாகிறது.

## குறிஞ்சித்தேன்நாவலில்இனவரைவியல்கூறுகள்

1963 ஆம் ஆண்டு வெளிவந்த ராஜம்கிருஷ்ணன் எழுதிய குறிஞ்சித்தேன் எனும் புதினம் நீலகிரி மாவட்டத்தில் மணிக்கல்ஹட்டியிலும் அதனைச் சுற்றி அமைந்துள்ள பகுதிகளில் வாழும் படகர் இனமக்களின் அறுபதாண்டு கால வாழ்வியலையும் அவர்களின் பண்பாட்டு மாற்றம், தொழில் முறைகளில் அடைந்துள்ள ஏற்ற இறக்கங்கள், அதனால் அம்மக்களுக்கு ஏற்படும் சிக்கல்கள் ஆகியவற்றை எடுத்துக்காட்டுவதாய்க் கதைக்கரு அமைக்கப்பட்டுள்ளது.

## புவிச்சூழல்

பூமியில் தோன்றிய ஒவ்வொரு உயிரினங்களும் இடச்சூழலுக்கும் காலச்சூழலுக்கும் ஏற்பத்தத் தம் வாழ்வினை அமைத்துக் கொள்கின்றன. மனிதனும் இவ்வியற்கை நியதிக்குள்கட்டுண்டு வாழ்கிறான். அவன் தேர்ந்தெடுக்கும் வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப, அவனுடைய பண்பாடும் அமையும். புவிச்சூழல் என்பது புதினத்தின் கதைக்களமாக அமைந்திருக்கும் மாவட்டம் அல்லது வட்டாரப் பகுதிகளின் புவியியல் பதிவுகளைக் குறிப்பதாக அமைகிறது.

நிலத்தைப் பின்புலமாகக் கொண்டு இலக்கியம் படைக்கப்படும் மரபு, பண்டைக் காலம் தொட்டு இன்றைய இலக்கியங்கள்வரை தொடர்கின்றது.

நாவல், சிறுகதை இரண்டிலும் காலம், இடம் என்ற இரண்டையும் கொண்டது தான் சூழல்.குறிப்பிட்ட சமூக, குடும்ப, தனிமனித பிரச்சனையைச் சொல்வதற்கே சூழல் பயன்படுகிறது. மாந்தர்களின் இருப்பு, இயக்கம் ஆகியவற்றிற்கான உயிரோட்டத்தையும், பண்பாட்டுச் சூழலையும் காலத்தின் வெளிப்பாட்டையும் நடப்பியல் பாங்கையும் புலப்படுத்த சூழல் துணை செய்கிறது. (சு.வேங்கடராமன், புனைகதை இலக்கியம், பக் 12,13)எனச் சூழல் பயன்படும் இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

குறிஞ்சித்தேன் புதினம் நீலகிரி மாவட்டத்தைப் பின்புலமாகக் கொண்டமைந்தது. நீலகிரி என்ற பெயர் ஏற்பட விதமாக இராமாயணத்தில் இராமபிரானின் படைத்தளபதிகளுள் ஒருவரான நீலன் என்பான் இப்பகுதியில் வாழ்ந்ததாகவும் அவன் பெயரால் வழங்கி வந்த நீலன்கிரி என்னும் பெயரே நாளடைவில் நீலகிரியாக மாறியுள்ளது. (தமிழக மாவட்ட நூல் வரிசை,ப.7) என லேனா தமிழ்வாணன் குறிப்பிடுகிறார். இங்குப் பசுமை நிறைந்த காடுகளும் மலைகளும் இயற்கை வளங்களும் மிகுந்திருக்கும் என ஆசிரியர் குறிப்பிடுகிறார். நீலமலையன்னையின் அருமை பெருமைகள், செல்வங்கள் சொல்லில் அடங்குபவையோ? செம்மை நீக்கித் தன்மை தரும் தன்மையினாள். கனிகளும் கிழங்குகளும் தானியங்களும் ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கித் தரும் வன்மையினாள். சந்தனமும் சாம்பிராணியும் கற்பூரமும் மணம்வீசும் சோலைகளை உடையவள். அவளில் தேனுக்கும் பஞ்சமில்லை (ராஜம்கிருஷ்ணன், குறிஞ்சித்தேன், ப.9) என்ற அடிகள் நீலகிரி மாவட்டம் இயற்கை எழில் சூழ்ந்த பசுமையான வறட்சியைக் கண்டறியாத, வேளாண்மை நிலங்கள் அதிகமுடைய பகுதி என்பதை எடுத்துக்காட்டகிறது.





Scanned with CamScanner

படகர் இனமக்கள் அம்மலையின் பூர்வீகக்குடிகள் அல்லர் என்றும், மைசூர்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர் என்றும் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. நீலகிரியின் பூர்வீகமக்களாக தோடர், கோத்தர், குறும்பர் ஆகியோர் இருந்தனர். சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முன், மைசூரிலிருந்து பண்டிப் பூக்காடுகளின் வழியே நீலகிரி மலையில் வந்து குடியேறியதாகச் சொல்லப்படும் படகமக்கள் சமூகத்திடையே அவரவர் தொழிலுக்குத் தகுந்த படி சில பிரிவுகள் இருந்தன (மேலது,ப.73) என்று குறிப்பிடுவதிலிருந்து படகர்கள் குடிபெயர்ந்து வந்தவர்கள் என உறுதிசெய்ய முடிகிறது.

## சுற்றுச்சூழல்

சுற்றுச்சூழல் என்பது கதைக்களமாந்தர்கள் வாழும் இடங்களின் சூழல்களை அதாவது அவர்களைச் சுற்றியமைந்த பகுதிகளில் உள்ளமலைகள், ஆறுகள், கடல்கள், வரலாற்றுப் புகழ்மிக்க இடங்கள் போன்றவற்றைக் குறிக்கிறது. குறிஞ்சித்தேன் புதினத்தில்.... குடியிருப்பைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் வளைக்குன்று சூழத் தெற்கில்மட்டும் சோலை சூழ்ந்த கானகங்கள் நீண்டு சென்று.. (மேலது,ப.10) என்றும், குன்றின் மேல் ஏறி வீடுகளுக்கு அருகில் சென்று நோக்கினால், மேற்கே மடிப்பு மடிப்பாக நீலவானின் வண்ணத்தில் யானை மந்தை போல் குன்றுகளும், அவற்றுக்கெல்லாம் சிகரமாக, தேவாபெட்டா என்றழைக்கப்படும் தேவாசிகரமும்... (மேலது,ப.10) என்று நீலகிரிமலையை இருப்பிடமாகக் கொண்டபடகர் இனமக்கள் வாழும் பகுதியைச் சுற்றியுள்ள குன்றுகள், சோலைகள், கானகங்கள் ஆகியவற்றைக் காட்சிப்படுத்தியுள்ளார்.

## காலநிலை

வானிலை என்பது மாறக்கூடியது. ஆனால் காலநிலை என்பது ஒரு பகுதியில் நிலவும் முப்பது ஆண்டுக்கால ஒட்டு மொத்த வானிலையைக் குறிக்கும் என்பர். இதனைவைத் தேநாட்டின் பொருளாதாரத் தேவைகள் கணக்கிடப்படுகின்றன. எந்தெந்தக் காலக்கட்டத்தில் என்னென்ன வகை பயிர் செய்ய வேண்டும் என்பது முதல் பருவ மழை தொடங்கும் காலத்தைக் குறிப்பிடுவது வரை காலநிலை உதவுகிறது எனலாம். ஓரிடத்தின் சுற்றுச்சூழலைத் தீர்மானிப்பதில் அவ்விடத்தின் பருவ நிலைக்குமிக முக்கியப் பங்குண்டு. பருவநிலையே சுற்றுச்சூழலின் அனைத்துத் தன்மைகளையும் கட்டமைக்கின்றது. தமிழகத்தின் பருவக்காலங்கள், ஆறுபருவங்களாகத் தொல்காப்பியர் பிரித்துச் சொல்லியிருப்பது தமிழரின் பருவநிலை பற்றிய அறிவையும் பருவநிலையின் முக்கியத்துவத்தையும் உணர்த்துகின்றது. ஓரிடத்தின் பருவநிலைக்கேற்ப அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறையும் அமையும். பருவநிலையில் ஏற்படும் மாற்றம் அவ்விடத்தின் அனைத்துத் தன்மைகளிலும் ஏற்படும் (எம்.ஆ. ராஜகோபாலன், சுற்றுச்சூழல் சில சிந்தனைகள், ப.10) எனப் பருவநிலைகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

குறிஞ்சித்தேன் புதினத்தில் நீலகிரி மலைப்பகுதியின் பொழுதை, கார்த்திகை மாதத்தின் இறுதி நாளின் அந்தப் பிற்பகலில் பசுங்கம்பளத்தை விரித்தாற்போல்... (ராஜம்கிருஷ்ணன், குறிஞ்சித்தேன்,ப.10) என்று அப்பகுதியின் வசந்தக்காலத்தையும், ஆனிப்பத்துத் தேதியில் பிடித்தமழை, புரட்டாசி பிறந்தாயிற்று விடவில்லை... அவள் நினைவு தெரிந்து இது போல் நீண்ட மழை கண்டிருக்கவில்லையே (மேலது,ப.183) என்று குறிப்பிடுவதிலிருந்து பருவக்காலங்களின் மாறுதல் குறித்த செய்திகளை அம்மக்கள் நன்கு அறிந்திருந்ததை உணரமுடிகிறது.

## குடியிருப்புமுறை

குடியிருப்பு முறை என்பது ஓரின மக்கள் நிலையாக ஓரிடத்தில் தங்கி வாழும் இடங்களில், அவர்களுக்கென ஏற்படுத்திக் கொண்ட இருப்பிட அமைப்பைக் கூறலாம். மலைப்பகுதியில் படகர் இனமக்களின் இல்ல அமைப்பைக் குறிப்பிடும் பொழுது, ஒரே மாதிரியான ஹட்டியின் இல்லங்கள், தாழ்ந்து குறுகிய வாயில்களைக் கொண்டவையாம். இரு முக்கியமான பகுதிகளை உடையனவாய் அமையப் பெற்றவை. முன்புறம் திறவாரந்தாவைப் போன்ற பகுதிகளை ஒட்டி, ஒவ்வொரு வீட்டிலும் வெளிமனை என்ற பகுதி உண்டு. அதை அடுத்து, உள்மனை என்ற பகுதியில் வாயிலுக்கு நேரானவானவாயில் சமையல் பகுதியைப் பிரிக்கும் உள்மனையின் வலது ஓரத்தில், பால்மனை அல்லது பூசை அறை, சுவரோடு ஒட்டிய வளைவு வாயிலுடன் இணைந்திருக்கும் (மேலது,ப.32) எனப் படகர்களின் இல்ல அமைப்பினைக் காட்சிப்படுத்தியுள்ளார்.

## உணவு

எத்தகு நிலையில் வாழ்வோராயினும் உணவு என்பது இன்றியமையாதனவாகும். மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முதலாவதாக அமைவது உணவு. பின்பு உடையும், இருப்பிடமும் இடம்பெறுவதைக் கொண்டு உணவின் முக்கியத்துவம் புலனாகிறது. ஒரு குறிப்பிட்ட மக்கள் சமூகத்தின் அசைவியக்கங்களை உணர அவர்தம் உணவுப் பழக்கவழக்கங்களைக் கூர்ந்து நோக்க வேண்டும். உணவுப்பழக்க வழக்கங்கள் ஒரு சமூகம் வாழும் பருவச் சூழ்நிலை,வாழ் நிலத்தின் விளைபொருள்கள், சமூகப்படி நிலைகள், உற்பத்தி முறை, பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொருத்து அமையும். (தொ.பரமசிவன், அறியப்படாத தமிழகம்,ப.23) என்ற கூற்றும் சான்று பகாகிறது. மலைப்பகுதிகளில் வாழும் படகர்களின் முக்கிய உணவுப் பொருளாக்ச் சாமை விளங்குவதை,.... மாதி வட்டிலைக் கொண்டு வந்து வைத்துச் சாமைச்சோறும்,மணக்க மணக்க நெய்யுமாக அமுதுபடைத்தாள். மொச்சைப்பருப்பின் புளியில்லாத குழம்பை ஊற்றினாள் (ராஜம்கிருஷ்ணன், குறிஞ்சித்தேன், ப.37) என்றவர்கள் புலப்படுத்துகின்றன. அத்துடன் இவ்வினமக்களிடம் முற்காலத்தில் புலால் உணவு உண்ணும் பழக்கம் இல்லாதிருந்ததையும், அதுதற்காலத்தில் மாற்றத்திற்குள்ளாகி உள்ளதையும்,... புலால் உண்பவரைக் கடையர் என்று கருதிய பெரியோரே, பிள்ளைப் புலால் உணவு கொள்வதைப் பெருமையான நாகரிகமாகக் கருதும் தாழ்வன்றோ வந்துவிட்டது (மேலது,ப.274) என்னும் பதிவினால் உறுதியாகிறது.

## உடை

படகர்கள் உடை உடுத்துவதில் தன் இனத்திற்கெனத் தனிப்பட்ட பாரம்பரியத்தைக் கடைப்பிடித்து வந்துள்ளனர். ஆண்கள் வெள்ளைத் தலைப் பாகையும், வெள்ளை வேட்டியும் கழுத்துக்குக்கீழ், போர்வையால் மூடிய ஆடையையும், பெண்கள் வெள்ளை வேட்டியுடன் வெள்ளை மேலாடையும் அணிவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இம்முறையானது அச்சமூகத்தின் ஏற்றதாழ்வில்லாத நிலையையும், ஒற்றுமை உணர்வையும் வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது. படகர்களில் சிறியவர் முதல் பெரியவர் வரை உடை அணிவதில் பாரம்பரிய முறையைப் பின்பற்றுவதை, ஐந்து பிராயம் மதிக்கத் தகுந்த சிறுமி ஒருத்தி ஓடி வந்தாள்... இடுப்பில் வெள்ளைமுண்டு உடுத்தி, பெரிய மனுஷியைப் போல் மேல் முண்டும் போர்த்திருந்தாள். (மேலது,ப.17) என்று பதிவு செய்துள்ளார்.

## தொழில்

மனிதனின் தேவைகளை நிறைவு செய்து கொள்ள பொருள் வேண்டும். பொருளைப் பெற அடிப்படையாக அமைவன, தொழில்கள் எனலாம். படகர் இன மக்களின் குலத்தொழிலாக வேளாண்மை செய்தல் காணப்படுகிறது. மலைப் பகுதிகளில் வாழும் படகர்கள், வானவனின் கருணை வேண்டி எங்கள்,

எதிர்காலம் அந்த மண்ணிலே கருவிருக்கும் கிழங்குகளில் தொங்கியிருக்கின்றன (மேலது,ப.213) என்று தொழில் நிலைச் சிக்கலைப் பதிவு செய்துள்ளார்.

## மொழி

ஓர் இனத்தைக் கண்டறியவும் அதன்வரலாற்றை அறியவும் இன்றியமையாத கருவியாகமொழி அமைகின்றது. படகர்களிடம் காணப்படும் பேச்சு வழக்கு மொழியானது, பல மொழிகளின் கலவையாக அமைந்துள்ளதை. இவர்கள் பேசும் மொழிக்கு எழுத்து வடிவம் இல்லாத காரணத்தால் முழுமையான வரலாற்றினை அறிய முடியவில்லை. கன்னடம், தமிழ், மலையாளம் மற்றும் ஆங்கிலம் எனத் தென்னிந்திய மொழிகளின் கலவையே படுகமொழி. கடந்த சில ஆண்டுகளாகத்தான் எழுத்து வடிவம் ஏற்படுத்த பல முயற்சிகளில் பலர் முயன்று வருகின்றார்கள் (தினத்தந்தி, ஞாயிறுமலர், கோவை, 06.08.2006) என்ற செய்தியின் வாயிலாக அறியமுடிகிறது.

## பழக்கவழக்கங்கள்

படகர் இனத்திற்கே உரிய பல்வேறு பழக்கவழக்கங்கள் ஆசிரியரால் பதிவு செய்யப்பட்டுள்ளன. திருமணத்தின் போது தாலி கட்டும் வழக்கம் படகர்களிடம் இல்லை. முதல் முறையாகப் பெண்கருவுற்று, வளைகாப்பு நிகழ்வின் போது தாலி கட்டும் பழக்கம் உடையவர்களாக இருந்துள்ளனர். இது கண்ணிகட்டுதல் என அழைக்கப்படும். இன்று இம்முறை மாறிப்பிற இனத்தினரைப் போன்று இவ்வினத்தினரும் திருமண நாளன்று தாலிகட்டும் நிகழ்வினை மேற்கொள்வதை, சாதாரணமாகக் கண்ணிகட்டும் வைபவம், முதல்முறையாக பெண் சூலியாக இருக்கும் போதே நிகழ்த்துவது அந்த நாளைய வழக்கம். ஆனால், லிங்கையா தம் மகளின் மனைவியின் போதே அந்த மாறுதலைப் புகுத்தி விட்டார். அன்று கிரிஜை மணப்பெண்ணாக மங்கல நீ கொண்டு அந்த இல்லம் புகுந்த அன்றே மங்கலச் சூத்திரத்தை ஜோகி அவள் கழுத்தில் முடிந்து விட்டான் (மேலது,ப.238) எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வாழ்வியல்சடங்குகள்

பிறப்புத் தொடங்கி இறப்புவரை பல்வகையான சடங்குகள் அவற்றோடு இணைந்த நம்பிக்கைகளின் அடிப்படையில் நடத்தப்பட்டு வருகின்றன. படகர்களின் திருமணங்கள் பெரியோர்களின் முன்னிலையில் அவர்களின் முழுச்சம்மதத்துடன் நடைபெறும் என ராஜம்கிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார். அதேபோல் திருமணத்திற்குப் பந்தலிடும் பழக்கமும் இருந்திருக்கவில்லை. அத்துடன் ஆண் வீட்டினர் பரிசப்பணம் கொடுத்துப் பெண்ணைப் பெற்றுள்ளனர். இதில் இன்றளவும் மாற்றம் ஏற்படாமல் இருந்து வருவதை, ஆண்வீட்டார் பெண்ணைத்தானமாகப் பெறுவதற்கு மாற்றாக ஆண் வீட்டார் பெண் வீட்டிற்குக் குறிப்பிட்ட பணத்தைப் பரிசமாக கொடுக்கின்றனர் (அக்காலத்தில் இது 60 ரூபாயாக வழங்கப்பட்டது. தற்பொழுது 200 ரூபாயாக வழங்கப்படுகிறது). அதைக் கொடுத்த பின்னர்த் திருமணத்திற்கு அப்பெண்ணை அழைத்து வரத்தயாராகிறார்கள் (மேலது,ப.396) எனப் பதிவு செய்துள்ளார்.

மனிதனுடைய பண்பாடானது அடிப்படையில் நிலவியல் சார்ந்தது. நிலத்தில் ஏற்படுகின்ற அவனுடைய வாழ்வியல் சார்ந்த பழக்க வழக்கங்களே காலப்போக்கில் பண்பாடாகப் பரிணமிக்கின்றன. நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியுடைய மக்கள் வாழ்வில், காலத்திற்கேற்பப் பண்பாடானது மாறி வருகிறது என்பதை இனவரைவியல் கூறுகளை ஆராய்வதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

## துணைநின்றநூல்கள்


1. க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி, (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்), திருவான்மியூர்,சென்னை. இ.ப.2000
2. சிவசுப்பிரமணியன்.ஆ,இனவரைவியலும்தமிழ்நாவலும்,பரிசல் வெளியீடு,மு.ப.2009
3. டென்சின், நார்மன், கே, இன்டர்பிரிடிவ் எத்னோகிராபி,சேஜ்பப்ளிகேசன்,மு.ப.1997
4. ப்ருவண்ட்ஹரால்டு,ஸ்டடிஆப் அமெரிக்கன் போக்லோர், டபல்யு. டபல்யு நார்டன், லண்டன், மு.ப.1986
5. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், மு.ப. 2009
6. பரமசிவம்.தி., அரியப்படாத தமிழகம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில்.ஆ.ப.2010
7. மானிடவியல் கலைச்சொல் அகராதி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்,சென்னை. மு.ப.1972
8. ராஜகோபாலன்,எம்.ஆ, சுற்றுச்சூழல் சில சிந்தனைகள், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பி.லிட்,அம்பத்தூ,சென்னை,மு.ப.1993
9. ராஜம்கிருஷ்ணன்,குறிஞ்சித்தேன், பாரிபதிப்பகம், சென்னை, மு.ப.1963.
10. லேனா தமிழ்வாணன், தமிழக மாவட்ட நூல் வரிசை, மணிமேகலை பதிப்பகம், சென்னை. மு.ப.1987.
11. வேங்கராமன்.சு,புனைகதை இலக்கியம், மீனாபதிப்பகம், நாகமலை,மதுரை.மு.ப.1997


## REFERENCES


1. Bhakthavatchala Bharathi.(2009). Panpattu Manudaviyal. Meiyyappan Pathippakam: Chidambaram.
2. Brunvand&Harold.(1986).Study of American Folklore. WW Norton & Co, London.
3. Denzin&Norman,K. (1997).Interpretive Ethnography, Ethnographic practices for the 21st century.New Delhi: Sage Publications.
4. Kriyavin Thatkala Tamil Agarathi. (2000). (Tamil-Tamil-English), Thiruvanmiur, Chennai.
5. Lenathamilvanan.(1987). Thamizhaka mavatta noolvarisai, neelagiri dist., Manimegalai Publication, Chennai.
6. Manudaviyal Kalai Chol Agarathi. (1972). Chennai: Thenninthiya saiva Sithartha Notpathippu Kazhakam.
7. Paramasivam, T. (2010). Ariyapadatha Thamizhakam. Nagarkoil: Kalachuvadu Pathippakam.
8. Rajagopalan,M.R.(1993).Sutru sooal sila sinthanaika.Chennai: New century Book house.
9. RajamKrishnan.(1963).Kurunjithen.Chennai: Paari Puthakapannai.
10. Sivasubramaniyan, A.(2009). Inavaraiviyalum Tamil Navalum.Chennai: Parisal Viyeedu.
11. Venkataraman, Su.(1993).Ounaikathai ilakkiyam.Madurai: meena pathippakam.



Author Acknowledgement: The Financial Assistance "SEED MONEY SUPPORT" from the management of Nallamuthu Gounder Mahalingam College, Pollachi has been gratefully acknowledged





Scanned with CamScanner

# BHARATHIAR UNIVERSITY
COIMBATORE - 641 046

## Ph.D. REGISTRATION COMMUNICATION

| | |
|---|---|
| Registration Number | CRE/ TAM22PNOV 670 /2022, Dated: 11-01-2023 |
| Name of the Candidate | MAHESWARI A |
| Programme for which registered | Ph.D. Part-Time |
| Subject | TAMIL |
| Department | Tamil |
| Institution | N G M College<br>Pollachi |
| Broad field of research | MODERN LITERATURE |
| Degree to be awarded | Ph.D. along with the title of the Ph.D. Thesis |
| Date of registration | 01-11-2022 |
| Name and Designation of the Supervisor | DR.T.GEETHANJALI<br>Asst.Prof.in Tamil<br>Department of Tamil<br>N G M College<br>Pollachi |
| Qualifying examination passed (Degree and Branch) | M.A. TAMIL |
| University | UNIVERSITY OF MADRAS |
| Exempted from appearing in Part I examinations | Shall appear for all three papers of M.Phil. Part I |
| Time to appear in Part I examination during or after | NOV / DEC 2023 |
| Time to successfully complete Part I examinations on or before | NOV / DEC 2025 |
| (within 5 occasions - otherwise their registration will be cancelled) | Shall appear for papers I,II & III |
| Time to submit thesis on or after | 01-11-2026 (Minimum period) but on or before |
| *(The candidate may submit synopsis three months before minimum period of submission of the thesis)* | 31-10-2028 (Maximum period)@ |

COMPUTER GENERATED STATEMENT
NO SIGNATURE NEEDED

@ in addition, four extensions are granted with a duration of six months each.

REGISTRAR i/c

Note: All the Candidates/Guides are advised to adhere to the regulation regarding DOCTORAL COMMITTEE which is furnished below. *

To : The Candidate through Principal / Director / HOD.

Copy to: (1) The Guide through Principal
DR.T.GEETHANJALI
Asst.Prof.in Tamil
Department of Tamil
N G M College
Pollachi
642 001.

(2) The Controller of Examinations, Bharathiar University.

*** Doctoral Committee:**

For each research scholar, a three member doctoral committee consisting of guide and two experts from within Tamilnadu (one member is HOD) may be formed from the panel of experts submitted by the research supervisor through proper channel and the Vice-Chancellor will nominate the expert from the panel.

The committee will meet to review the progress of the candidate at least twice during the period of the research programme. The first meeting will be conducted if the candidate has cleared the Part-I exams and made some progress in the research work or identification of the research problem. The committee has to recommend for the conformation of registration. During the second meeting if the committee has satisfied with the research work of candidate, then the committee recommends for submission of the synopsis and thesis. [Ph.D. Modified Regulations (Jan.2012 onwards)]

*Please collect the copy of the "instructions to the scholars" from the Principal.*

Scanned with CamScanner

# BHARATHIAR UNIVERSITY
## COIMBATORE - 641 046, TAMILNADU, INDIA

| State University | Accredited with "A" Grade by NAAC | Ranked 13th among Indian Universities by MHRD-NIRF |
|---|---|---|

Date: 18.12.2021

Ref. No.COE/Ph.D./Viva/7641

From
Professor
Centre for Research and Evaluation
Bharathiar University
Coimbatore – 641 046

To
Dr.T. Geethanjali
Assistant Professor of Tamil,
N.G.M. College (A), Pollachi-642 001
Ph: 73734 46602

Dear Sir/Madam,

Sub.: Ph.D. Viva-Voce – Permission – Reg.
Ref.: V.C.'s Note Order dated 17.12.2021

*****

I am, by direction, inform you that the following are the examiners fixed by the University authorities to conduct the Ph.D. Viva-Voce Examination of **Nalini S, Dept. of Tamil, N.G.M. College (A), Pollachi-642 001.**

| | |
|---|---|
| Convenor / Supervisor | Dr.T. Geethanjali<br>Assistant Professor of Tamil,<br>N.G.M. College (A), Pollachi-642 001. Ph: 73734 46602 |
| External Examiner | Dr.K. Krishnamoorthy<br>Associate Professor & Head,<br>Dept. of Tamil, PG & Research Centre,<br>A.P.A. College of Arts & Culture, Palani-624 601 |
| University Nominee | The Principal N.G.M.College, Pollachi |

Please find enclosed the report from Indian Examiner and Foreign Examiner. **In Case if any of the Examiners suggested correction in the thesis, then** *the candidate has to carry out the corrections. On Submission of authorization letter from the guide, the candidate may collect the copies of the thesis from this office. Corrected copy of the thesis has to be submitted to the Guide at the time of viva-voce Examination. The corrections duly certified by the guide and certificate to this effect has to be submitted along with the enclosed correction certificate format and corrected thesis after Viva Voce Examination*

You are hereby requested to prepare the consolidated report of Indian and Foreign examiners and conduct the Ph.D. Viva-Voce Examination. The date and time of the Viva-Voce Examination convenient to both the Guide and external examiner may be fixed. Viva-Voce shall be conducted by giving 15 days notice and the same shall be intimated in the format enclosed to the Research and Evaluation office of Bharathiar University. The supervisor is requested to issue the notification specifying the date, time and venue for the conduct of Viva-voce examination. The Viva-Voce Examination has to be completed within 60 days of the receipt of this letter.

After conducting the Viva-Voce Examination, kindly submit the following reports immediately to The Professor, Centre for Research and Evaluation, Bharathiar University, Coimbatore - 641 046.

1. Consolidated report & certificate for publication of Ph.D. thesis to grant permission for publishing the thesis
2. Acceptance Letters from External Examiner and Guide
3. The report of the Examiners on the Viva-Voce Examination.
4. List of persons who attended the Online/ Offline Viva-Voce Examination.
5. ID proof for the Research supervisor, External examiner & the candidate, in case of online viva
6. Video record of the viva-voce examination, in case of online viva
7. Screen Shot, in case of online viva
8. Corrected copy of thesis, if corrections are suggested by the examiner
9. Correction certificate, if applicable

Thanking you,

Yours faithf

Professor (C

O/c
18/12/21    20/12/21

Encl: 1.Copy of the Synopsis & Regulations
2. Reports
3. Nominee Claim & Report Format

Scanned with CamScanner

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, (தன்னாட்சி)

பொள்ளாச்சி-642 001

தமிழ்த்துறை

முனைவர் த.கீதாஞ்சலி

நெறியாளர்


## முனைவர் பட்டபொதுத் திறந்தநிலை வாய்மொழித் தேர்வு அறிவிப்பு

பாரதியார் பல்கலைக்கழகம் கடிதம் எண் **COE/Ph.D/Viva/163** நாள்: 10.02.2023

அன்புடையீர் வணக்கம். "பாலைத்திணைப் பாடல்கள் உணர்த்தும் சங்ககால வாழ்வியல்" என்னும் பொருளில் எனது மேற்பார்வையில் ஆய்வு செய்து பாரதியார் பல்கலைக் கழக முழுநேர முனைவர் பட்டத்திற்காக திருமதி.அ.நித்யா **(16511/B1/2018)** (ஆய்வாளர், தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி - 642 001) அவர்களால் அளிக்கப்பட்டிருந்த ஆய்வேடு புறநிலைத் தேர்வாளர்களால் மதிப்பீடு செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி ஆய்வாளருக்கு 02.03.2023 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரியில் பொதுதிறந்தநிலை வாய்மொழித்தேர்வு நடைபெற உள்ளது.

நெறியாளர் மற்றும் புறநிலைத் தேர்வாளர் முன்னிலையில் நடைபெறும் இவ்வாய்மொழித் தேர்வில் பேராசிரியர்கள், துறை வல்லுநர்கள், ஆய்வாளர்கள் கலந்துகொண்டு கருத்துரைக்க வேண்டப்படுகின்றனர். வாய்மொழித் தேர்வுக்குரிய ஆய்வேடு பாரதியார் பல்கலைக் கழக நூலகத்திலும் நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி நூலகத்திலும் வைக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வாய்மொழித்தேர்வு நிகழிடம் | விவேகானந்தர் அரங்கம்,<br>நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,<br>பொள்ளாச்சி. |
| நாள் மற்றும் நேரம் | 02-03-2023 வியாழக்கிழமை காலை 10.00 மணி |
| புறநிலைத் தேர்வாளர் | முனைவர் இரா.இளவரசு,<br>உதவிப்பேராசிரியர்,<br>முதுகலைத் தமிழ்த்துறை மற்றும் தமிழாய்வுமையம்,<br>அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி),<br>சிவகாசி. |

Dr. T. GEETHANJALI, Ph.D.,
Asst. Prof. of Tamil
N.G.M. College [Autonomous]
POLLACHI - 642 001
நெறியாளர்

பே. மகேஸ்வரி
துறைத்தலைவர்
பே. மகேஸ்வரி
இணைப் பேராசிரியர் &
துறைத் தலைவர்
தமிழ்த்துறை, ந.க.ம. கல்லூரி,
பொள்ளாச்சி - 1.

முதல்வர்
Dr. R. MUTHUKUMARAN,
M.A.,M.Phil.,B.Ed.,Ph.D.,
PRINCIPAL
N.G.M. College, Pollachi - 642 001
Coimbatore District

நகல்

பாரதியார் பல்கலைக்கழகம் பரிந்துரைத்த புறநிலைத் தேர்வாளர்
துணைவேந்தர், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை
பேராசிரியர், ஆய்வு மற்றும் மதிப்பீட்டுமையம், பாரதியார் பல்கலைக் கழகம்
பதிவாளர், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை
முதல்வர், நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி
தமிழ்துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர்கள், நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி
பாரதியார் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட தமிழ்துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள்

NALLAMUTHU GOUNDER MAHALINGAM COLLEGE, POLLACHI


Scanned with CamScanner